தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1979 மார்ச் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிவிப்புகள்.

(அ) திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் குணமடைந்திட நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்ளல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் பம்பாயில் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதை அறிந்து இந்த அவை தனது கவலையைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் விரைவில் குணமாகி உடல் நிலை சீரடைந்து நாட்டிற்கு நலன் பயக்க வேண்டுமென்று இப்பேரவை சார்பாகவும் நமது நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திண்டுக்கல் மாவட்ட மருத்துவ அதிகாரி.

குறுகிய கால வினா எண். 21— திரு. என். பழனிவேல் : திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்ட மருத்துவ அதிகாரி அப்சல் கான் மீது நடந்த சம்பவம் சம்பந்தமாக விசாரணை எந்த இடத்தில் தொடரும் ?

(ஆ) யார், யார் விசாரிக்கப்படுவர் ?

(இ) பொது மக்களும் அந்த விசாரணையில் சாட்சியம் அளிக்க வசதி செய்யப்பட்டுள்ளதா ?

[1979 மார்ச் 22

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ), (ஆ), (இ) இது போன்ற விசாரணைகள் ஏற்பாடு செய்த பிறகு, விசாரணை எந்த இடத்தில் நடைபெறும் என்பது பற்றி, விசாரணை அதிகாரி பத்திரிகைகள் முலம் அல்லது வேறு உசித மான வழிகளில் அறிவிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. யார், யார் விசாரிக்கப்படுவார்கள் என்ற முடிவு செய்வது, விசாரணையில் சாட்சியம் கூற முன் வருபவர்களையும், விசாரணை அதிகாரியின் முடிவையும் பொறுத்தது. பொது மக்களில் சாட்சி யம் அளிக்க விரும்புபவர்கள் எப்படித் தங்கள் பெயரை விசாரணை அதிகாரியிடம் பதிவு செய்ய வேண்டுமென்ற முறை பற்றி விசா ரணை அதிகாரி அறிவிப்பது நடைமுறையாக இருந்து வருகிறது. இந்த முறையை இந்த சந்தர்ப்பத்திலும் விசாரணை அதிகாரி பின்பற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : தலைவா அவர்களே, மாவட்ட மருத்துவ அதிகாரி மீது சாற்றப்பட்டுள்ள இந்தக் குற்றச் சாட்டின் மீது விசாரணை சம்பந்தமாக நான் கேட்டிருந்த கேள்விக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில் எனக்குப் புரியாமல் இருக் கிறது. இந்த நிலையில் நான் எதை வைத்து துணைக் கேள்வி போடுவது, துணைக் கேள்வி போடமுடியாமல் இருக்கிறது. எல்லாமே அரசால் நியமிக்கப்பட்டிருக்கிற அதிகாரியின் இஷ்டத் திற்கு விடப்படும் போல் இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர் களின் பதில் பொருத்தமானது தானா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விசாரணைக்கு ஒரு அதிகாரியை நியமித்துவிட்டதற்குப் பிறகு அவ்விசாரணையில் குறுக்கிடுவதுதான் பொருத்தமானதல்ல.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விசாரணை எவ்வளவு காலத்திற்குள் முடிவு அடையும், தற்போது சார்ஜ் ஷீட் தரப்பட்டு விட்டதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த விசாரணை ஒரு மாதத்திற்குள் முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த விசா ரணையில் மிக முக்கியமாக மக்களும் அரசு ஊழியர்களும் வற் புறுத்துவது, அந்த டாக்டர் தான் லஞ்சம் பெறவில்லை என்று சொல்கிறார். அவருடைய அறையிலோ மேஜையிலோ அவர் அணிந்திருந்த ஆடைகளிலோ பரிசோதனை செய்து பணம் எடுக்கப்படவில்லை. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியிலே விசாரணைக்கு இடையூறு இல்லாமல் இருக்கவேண்டும். உள்ளுக்குள்ளே போகா மல் மேலோட்டமாக விசாரணை பற்றி மட்டும் கேளுங்கள்.

1979 மார்ச் 22]

திரு. என். வரதராஜன் : அவருடைய அறையிலே இருக்கும் படியான ஒரு ஒதுக்கமான பகுதியிலே தான் அந்தப் பணம் கிடைத்தது என்று சொல்லுகிறார்கள். அந்த டி.எம்.ஒ.வும் ஒரு புற நோயாளியின் சீட்டைக் கையில் பிடித்திருந்ததாகவும் அதிலே தான் பவுடரைக் தடவியிருக்கிறார்கள் என்று சொல்கிறார். ஆகவே அந்தச் சீட்டையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தச் சீட்டு விசாரணை முக்கியமானது என்ற அடிப்படையிலே அந்தச் சீட்டையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய விவரங்களை விசாரிப்பதற்காகத் தான் அந்த அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த விசாரணையில் உண்மை கிடைக்கும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அந்த டாக்டர் பேரிலே சார்ஜ் ஷீட்போட்டு கிரிமினல் கேஸ் போடுவதாகத் தெரிகிறது. அதே நேரத்திலே இந்த விசாரணை நடைபெறுகிறது. இப்படி இந்த விசாரணை நடைபெறுகிறபோது அந்த கேஸும் போடப் பட்டு நடத்தப்படுமா ? பிராஸிக்யூஷன் நடக்குமா ? அந்த புரசீடிங்ஸ் என்ன ஆகும் என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விசாரணை பற்றிய தகவல் மட்டும் தான் என்னிடத்திலே இருக்கிறது. சார்ஜ் ஷீட் போட்டிருக்கிறார்களா என்ற தகவல் இல்லை. விசாரிக்கப்படு கிறபோது அந்த உண்மையின் அடிப்படையிலே தான் அரசு எந்தக் காரியத்தையும் செய்யும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, * * (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 504.

பழநி பேருந்து நிலையம்.

*வினா எண். 504—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழநி நகர பேருந்து நிலையம் போதிய வசதியில்லாமல் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.